**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :
Miscellaneous :
Preliminary register :
Sessions :

Sessions Case No. 58 of 2020

Deposition of witness for :
:

Prosecution : PW- 8
Defence :
Court :

Name : Prakash
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of December 2022.**

முதல் விசாரணை:

நான் குமாரம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு வித்தியா மந்தீர் கல்லூரியில் செக்யூரிட்டி பணியில் நான் பணி செய்து வந்தேன். அப்புனு என்பவரும் நானும் இரவு காவல் பணியில் இருந்தோம். இரவு சுமார் 10 மணிக்கு மேல் நாங்கள் பணியிலிருந்தபோது டமீல் என சத்தம் கேட்டது. சுமார் 4, 5 நிமிடங்கள் கழித்து ஒரு நபர் தன்னை சுட்டுவிட்டார்கள், சுட்டுவிட்டார்கள் என்னை காப்பாற்றுங்கள் என சொல்லிக்கொண்டே கல்லூரியின் விடுதி கேட் அருகே கீழே விழுந்து தண்ணீர், தண்ணீர் என கேட்டார். சத்தம் கேட்டு விடுதி மாணவர்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டு ஓடி வந்தனர். தண்ணீர் வாங்கி கீழே விழுந்த நபருக்கு நான் தண்ணீர் கொடுத்தேன். என்னுடன் இருந்த அப்புனு கல்லூரி மேல் அதிகாரிக்கு போன் மூலம் தகவல் சொன்னதில் கல்லூரி விடுதி கண்காணிப்பாளர் இளையப்பன் அங்கு வந்துவிட்டார். கண்காணிப்பாளர் இளையப்பன் அடிப்பட்ட நபரை விசாரித்து அவர் தகவல் சொன்னார். இளையப்பன் யாருக்கு தகவல் சொன்னார் என்று எனக்கு தெரியாது. பிறகு நான் , அப்புனு மற்றும இளையப்பன் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றோம். எங்கள் கல்லூரி விடுதி கேட்டின் முன்பிருந்து 50 மீ தூரம் சம்பவம் நடந்ததாக சொன்னார்கள். அங்கு நாங்கள் சென்று பார்த்தபோது ஒரு இருசக்கர வாகனம் ரோட்டிற்கு கிழக்கே விழுந்து கிடந்தது. அடிப்பட்ட மற்றொரு நபர் யாருக்கோ போனில் தகவல் சொன்னார். 10 நிமிடத்தில் மாரியப்பம் அந்த இடத்திற்கு வந்தார். பின்பு நாங்கள் அனைவரும் சேர்ந்து மீண்டும் கல்லூரி விடுதி முன்புறம் வந்தோம். பின்பு போலீசாருக்கும 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கும் தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வாகனத்தில் அனைவரும் சென்றுவிட்டார்கள். சம்பவத்திற்கு அடுத்த நாள் மற்றும் அதன் பிறகும் சுமார் 10 நாட்கள் போலீசார் எங்களை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை **1**, 2 எதிரி தரப்பில் **:**

வித்தியா மந்தீர் கல்லூரி காவல் பணியில் சுமார் **15** நபர்கள் சிப்ட் முறையில் வேலை செய்கிறோம். ஒரு சிப்டில் **7** நபர்கள் வேலை செய்வோம். கல்லூரியில் **5** நபர்களும், விடுதியில் **2** நபர்களும் பணியிலிருந்தோம். நான் இரவு பணியில் கேட்டின் அருகே ஷேர்ப்போட்டு அமர்ந்திருந்தேன். கல்லூரி கேட்டின் முன்புறம் பூச்செடிகள் பல உள்ளது என்றால் சரிதான். அடிப்பட்ட நபர் சுமார் **50** மீ தூரத்திலிருந்து ஓடி வந்ததாக தெரிந்து கொண்டோம். எங்கள் அதிகாரி சம்பவ இடத்திற்கு வந்த பிறகு தான் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் ஆமாம். போலீசாரும் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு தான் ஆம்புலன்ஸில் காயம் பட்ட நபர்கள் ஏற்றி அனுப்பப்பட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வருவதற்கு சுமால் முக்கால் மணி நேரம் ஆகியிருக்கும். நான் பார்த்ததாக சொஙலலும் இரு சக்கர வாகனம் அடிப்பட்ட நபர்கள் வந்த வண்டி என தெரிந்துக்கொண்டேன். நான் தகவல் சொன்ன பிறகு கல்லூரி கண்காணிப்பாளர் இளையப்பன் என்பவர் மட்டும் தான் சம்பவ இடத்திற்கு வந்தார்.

குறுக்கு விசாரணை **3**ம் எதிரி தரப்பில் **1, 2** எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளவதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**